**செய்திவெளியீடு எண்.33/2016 நாள் 04.07.2016**

# நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் செயல்பாடுகள் குறித்து அனைத்து மாநகராட்சி ஆணையர்கள் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்கள் உள்ளிட்ட அலுவலர்கள் கூட்டத்தில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திருஎஸ்.பி.வேலுமணி அவர்கள் ஆய்வு.

*******

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கீழ் செயல்படும், பெருநகர சென்னை மாநகராட்சி, நகராட்சி நிர்வாகம், பேரூராட்சிகள் துறை, சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம் (TNUIFSL), தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (TUFIDCO) ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்து இன்று (4.07.2016) சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய கூட்ட அரங்கத்தில் அனைத்து மாநகராட்சி ஆணையர்கள் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்கள் உள்ளிட்ட அலுவலர்கள் கூட்டத்தில் விரிவான ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி உள்ளிட்ட 12 மாநகராட்சிகள், 124 நகராட்சிகள் மற்றும் 528 பேரூராட்சிகளில் நடைபெற்று வரும் திட்டப்பணிகளின் முன்னேற்றம் குறித்து விரிவான ஆய்வு மேற்கொண்டார். குறிப்பாக சாலைப் பணிகள், பாதாள சாக்கடைத் திட்டங்கள், குடிநீர் வழங்கல் பணிகள், மழைநீர் வடிகால் பணிகள், எல்இடி தெருவிளக்குகள் அமைத்தல், திடக்கழிவு மேலாண்மை உள்ளிட்ட அனைத்து வளர்ச்சிப் பணிகளின் முன்னேற்றம் குறித்து விரிவான ஆய்வு மேற்கொண்டார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் விதி 110ன் கீழ் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், மானிய கோரிக்கை அறிவிப்புகள் உள்ளிட்ட அறிவிப்புகளின் மீது எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொண்டார். நிலுவையில்

உள்ள அறிவிப்புகள் மீது உடனடியாக நடவடிக்கை எடுத்து செயல்படுத்த வேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார்.

பெருநகர சென்னை மாநகராட்சி உள்ளிட்ட அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் பல்வேறு திட்டங்களின் கீழ் நடைபெற்றும் வரும் சாலைப் பணிகள், குடிநீர்த் திட்டம், பாதாள சாக்கடைத் திட்டம், மழைநீர் வடிகால், திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் உள்ளிட்ட அனைத்து திட்டப் பணிகளையும் உடனடியாக நிறைவேற்ற அனைத்து அலுவலர்களும் சிறப்பு கவனம் செலுத்தி செயல்பட வேண்டும் என அனைத்து மாநகராட்சி ஆணையர்கள் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்கள் உள்ளிட்ட அலுவலர்களுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

எதிர்வரும் பருவமழையை முன்னிட்டு அனைத்து மாநகராட்சிகள் நகராட்சிகள் மற்றும் பேரூராட்சி பகுதிகளில் நோய் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென அனைத்து அலுவலர்களுக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார்.

இவ்வாய்வுக் கூட்டத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மை செயலாளர் திரு.க.பணீந்திரரெட்டி இஆப., சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய முதன்மை செயலர்/ மேலாண்மை இயக்குநர் திரு.விக்ரம் கபூர், இஆப., தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவன மேலாண்மை இயக்குநர் திரு.பி.டபுள்யூ.சி.டேவிடார், இ.ஆ.ப., தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.சி.விஜயராஜ் குமார், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக இயக்குநர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., பேரூராட்சிகளின் இயக்குநர் திரு.க.மகரபூஷனம், இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையர்கள், முதன்மை தலைமைப் பொறியாளர், தலைமைப் பொறியாளர்கள் கண்காணிப்பு பொறியாளர்கள், செயற் பொறியாளர்கள் அனைத்து மாநகராட்சி ஆணையர்கள் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்கள், மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைக் குடிநீர்